# உத்தரபிரதேசத்தை சேர்ந்த 67 நபர்கள் சொந்த ஊருக்கு அனுப்பி வைப்பு.

கொரோனா வைரஸ் தொடர்பாக 144 தடை உத்தரவு விதிக்கப்பட்டு, ஊரடங்கு அமல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, எந்தவொரு போக்குவரத்தும் செயல்படாத காரணத்தினால் வெளி மாநிலத்திலிருந்து அரியலூர் மாவட்டத்திலுள்ள பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்து வரும் உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த 67 பணியாளர்கள் சொந்த மாநிலமான உத்தரபிரதேசம் செல்வதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார்கள். 67 நபர்களும் உத்திரபிரதேச மாநிலத்திற்கு செல்வதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனுப்பிவைக்கப்பட்டனர்.

அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கிலிருந்து 03 வாகனங்கள் மூலம் 67 பணியாளர்களையும், கோட்டாட்சியர் திரு.ஜெ.பாலாஜி அவர்கள், இரவு உணவுகள் வழங்கி, வழி அனுப்பி வைத்தார்கள். உடன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ரவிச்சந்திரன், வட்டாட்சியர் சந்திரசேகரன் ஆகியோர் உள்ளனர்.

வாகனங்களில் காவல்துறையினர் மற்றும் வருவாய்த்துறையினர் சென்று திருச்சியிலிருந்து இன்று இரவு தொடர் வண்டியில் அவர்களை உத்திரபிரதேச மாநிலம் செல்வதற்கு வழி அனுப்பிவைக்கப்படுவார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**